1987 மார்ச் 28] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

அவர்களிடத்திலேயிருந்து நிவாரணம் கோரும் மனுக்களை வாங்கி நேரிடையாகக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் ஏழ்மை நிலைமையில் உள்ள குடும்பங்கள் என்பதாலும் அவர்களுக்கு தனிக் கவனம் செலுத்தி தனிச் சலுகையாக நிவாரணம் கொடுக்க வேண்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் தமிழகத்திலே பல ஊர்களில் கள்ளச் சாராயம் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதைத் தடுக்க தனி காவல் படை இருந்தும் கூட சரியான முறையில் நடவடிக்கை எடுப்பது கிடையாது. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் எப்படி தடுக்கப்படுகிறது, எப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்பதைப் பற்றி தனியாக இந்த அவை விவாதிக்கலாம். அதற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். தினமும் ஆயிரக்கணக்கான 'ரெய்ட்' நடத்தப்பட்டு பல ஆண்களும், பெண்களும் கைது செய்யப்படுகிறார்கள். குண்டர்கள் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்படுகிறார்கள். உள்ளே போன பிறகும் இது தொடர்ந்து நடக்கிறது. போதுமான போலீஸ், வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(உ) கொள்ளிடம் ஒன்றிய கிழக்குப் பகுதியில் நீர் இல்லாததால் "குள்ளக்கார்" பயிர்கள் பாதிப்பு.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தின் கடைகோடிப் பகுதியான சீர்காழி வட்டம் கொள்ளிடம் ஒன்றியத்தில் கிழக்குப் பகுதியில், சுமார் 50,000 எக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப் பட்டு, தண்ணீர் இல்லாமல் வாடிக் கிடக்கும் 'குள்ளக்கார்' பயிரைச் சாகுபடி செய்த விவசாயிகளின் துயர் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

குள்ளக்கார் பயிர் தஞ்சை மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை பாசனம் செய்யப்படுகிறது. அதன் விவரங்கள் வருமாறு :

தஞ்சை மாவட்டம்		
தெற்கு ராஜன் வாய்க்கால்	1750	ஏக்கர்கள்
புது மன்னியார்	1750	,,
	3500	,,
தென்னாற்காடு மாவட்டம்		
கொள்ளிடம் வடக்கு ராஜன் வாய்க்கால்	500	,,
கவரப்பேட்டை வாய்க்கால்	500	,,
வீராணம் ஏரி	1150	,,
கான்சாஹிப் கால்வாய்	4000	,,
	6150	,,

இந்த ஆண்டு மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீரினளவு மிகவும் குறைவாக இருந்ததால் இவ்வாண்டு குள்ளக்கார் பயிரை சாகுபடி செய்ய வேண்டாம் என்று ஏற்கனவே அறிவிப்பு செய்யப் பட்டுள்ளது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் போதிய நீரில்லாத காரணத்தினால் இந்த குள்ளக்கார் பயிர்களுக்கு நீரளிப்பது இயலாத காரியம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே, சீர்காழி தாலுக்காவில் 3,500 ஏக்கர் நிலத்தில் குள்ளக்கார் பயிர் செய்திருப்பதாகவும் சிதம்பரம் தாலுக்காவில் 6,150 ஏக்கர் நிலத்தில் குள்ளக்கார் பயிர் செய்திருப்பதாகவும், ஆக மொத்தம் 9,650 ஏக்கரில் குள்ளக்கார் இருந்ததாகவும், மேட்டூரில் தண்ணீர் இல்லாததால் அதை சாகுபடி செய்ய வேண்டாம் என்று

1987 மார்ச் 28] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் குள்ளக்கார் சாகுபடி என்பது ஜனவரி மாதத்தில் மேட்டூர் பகுதியில் சாகுபடி முடிந்த பிறகு, அந்த மேட்டூரில் உபரியாகவுள்ள தண்ணீரை கல்லணையில் தேக்கி வைத்து ஜனவரியில் விதை விதைத்து மே மாதத்தில் அறுவடை செய்யக்கூடிய வழக்கம். இது காவிரி ஒப்பந்தத் தோடு சொந்த ஒப்பந்தமாகும். காரணம், காவிரி தண்ணீர் கடைகோடிப் பகுதியாக உள்ள பகுதியிலே சரிவர வராத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் பின்னாலே சாகுபடி செய்யலாம் என்பதும் அதற்குப் போதுமான தண்ணீரை கல்லணையில் தேக்கி வைத்துக் கொடுக்க வேண்டும் என்பதும் நீர்ப் பாசனத் துறையில் நீண்ட நாட்களாக இருந்து வந்த வாடிக்கையான வழக்கம். ஆகவே அப்படிச் செய்வதற்கு அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இனிமேலாவது தொடர்ந்து அந்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அது முடியவில்லை என்றால் 1972-ல் கொள்ளிடத்தில் ராட்சஸ இயந்திரங்களை வைத்து தண்ணீரை இறைத்து விவசாயிகளுக்குக் கொடுத்த அந்தத் திட்டத்தை இப்போது செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கூற்றெல்லாம் மேட்டூரிலே தண்ணீர் இருக்குமென்றால் சரியாக இருக்கும். ஒவ்வொரு தடவையும் கர்நாடகத்தோடு போராடித்தான் தண்ணீர் வாங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லி, கடந்த 2 தினங்களுக்கு முன்பாக 3 டி.எம்.சி. தண்ணீர் பெற்றிருக்கிறோம். நம்மால் முடிந்த அளவுக்கு சிறப்பாக, இருக்கிற தண்ணீரைப் பிரித்து இந்த ஆண்டு நாம் கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே இந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியாது என்று அறிவித்தாலும், அங்கே யுள்ள விவசாயிகள் குள்ளக்கார் பயிரை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் முடிந்த அளவுக்கு குள்ளக்கார் பயிருக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். அதிகாரிகளும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.